4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.*

திரு. கே.என். இலட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐந்தாவது முதல் இருநூற்று இருபதாவது வரையிலான 16 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. ப. இராஜரெத்தினம்.*

திரு. ப. இராஜரெத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய பணிவான வணக்கத்தை முதலில் வைக்கிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினோராவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. லா. சந்தானம்.*

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி நான்காவது முதல் இருபத்தி ஆறாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*